முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 776**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**13.11.2021**, சனிக்கிழமை

1. ஓங்கார தவசியே அரங்கா வாழ்க
ஓங்கார சக்தியே தேசிகா வாழ்க
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் இனிதே
ஓதிடுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
2. ஆசிதனை அரங்கன் தர்மம் தானம்
அகிலத்தை பாதுகாப்பு தந்து காத்தருளும்
வாசி வென்ற ஞானவான்களெல்லாம்
வணங்கி வந்து அரங்கன் தர்மத்தில் இருக்க
3. இருக்கவே அரங்கன் நாமஜெபத்தை சொல்லி
இந்த உலகில் எங்கு தர்மம் நடக்கின்றதோ
கருத்தாக அங்கெல்லாம் கந்தபெருமான் யான்
கருணைகொண்டு அரங்கன் ஆசியாக வந்து
4. வந்துமே தர்ம சக்தியாக வந்தும்
வல்லமைபட உலகை காத்தருளுவேன்
சிந்தைவைத்து அரங்கன் நாமஜெபத்தை
சிறப்பாக செய்துவரும் மக்களெல்லாம்
5. விந்தைபட இந்த கலியுகத்தில்
விளம்பிடுவேன் ஞானிகளாகும் வாய்ப்பு கிட்டி
கிட்டியே அரங்கன் தவத்தின் மூலம்
குறையில்லாத மகா சக்திகளாகி
6. ஆகியே கலியுகத்தை மீட்கும்
அற்புதமான ஞானிகளாக உருவெடுப்பர்
மகிழவே அரங்கன் தொடர்பும்
மாதர்ம பலமும் மாதவத்தின் பங்கும்
7. பங்குபெற்று உலக மக்களெல்லாம்
பழுதில்லா அரங்கன் ஞானத்தாலே
சிந்தை தெளிவுகண்டு சிறப்பறிவோடு
சித்திகளும்பெற்று இந்தகலியுகத்தில் உயர்வர் என்பேன்
8. உயர் ஞானம் தரும்
அரங்கன் உபதேசமே  உலகத்தை மீட்கும்
ஆறுமுகன் என் ஞானமாகும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–